# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 177/மா/2022**
**நாள் : 2.11.2022**

திரு. தி. சேதுராமன்
சென்னை–600 094.

– முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–8,
பெருநகர சென்னை மாநகராட்சி.

– எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, சூளைமேடு, பத்மநாபா நகர், வள்ளலார் தெரு, எண்.10 என்ற முகவரியில் வசிக்கும் திரு. தி. சேதுராமன் என்பவரின் 24.9.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 177/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, சூளைமேடு, பத்மநாபா நகர், வள்ளலார் தெரு, எண்.10 என்ற முகவரியில் வசிக்கும் திரு. தி. சேதுராமன் என்பவரின் 24.9.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில்,

"My complaint is regarding the non-removal of encroachment by Chennai Corporation's officials Encroachment named "Muthumari Amman Temple" measuring approximately 30 Sq.ft. in Vallalar Street, Choolaimedu, Chennai 600 094 not removed despite Multiple complaints, 3 orders from CJ's Division bench of Hon'ble Madras High Court and Corporation's notice.

**Complaint background:**

In 2018, Mr. Bothal Raj, a resident of Vallalar Street made written complaints to the Chennai Corporation's officials to remove the encroachment named "Muthumari Amman Temple" in Vallalar Street which was built on the road, infront of his house blocking nearly 50% of the entry to his house. As no action was taken on the encroachment, WP 20229 of 2018 was filed by him in Hon'ble Madras High Court. High Court issued notice to GCC for filing their response, but reply was not filed by GCC, which made the case pending for nearly 3 ½ years.

In 2021, I made written and online complaints to remove the encroachment, but my complaint was closed stating the case filed by Mr. Bothal Raj that the matter is pending

with Hon'ble Madras High Court and action will be taken upon final order. It's very strange that GCC was waiting for the final orders without filing their response. While the above case was pending in the Madras High Court, Chennai Corporation issued a notice in Aug 2018 to encroachers U/s. 220 read with 222 of the Chennai City Municipal Corporation Act 1919 to remove the encroachment within 15 days from the date of notice, falling which the encroachment will be removed by the GCC. Through this notice it is apparent that GCC can remove the encroachment even if the case is pending in the court. And moreover, the case filed was also for the removal of the encroachment. But GCC closed my complaint stating the pending Court case with the knowledge that final orders will not come without filing GCC's response. Corporation officials just issue notice to the encroachers to inform the court that action has been initiated to remove the encroachment and it will be removed soon (Please refer to GCC's standing counsel statement in judgement WP 20229 of 2018 and WP 21943 of 2021). But after the court hearing they forget about the notice issued and the encroachment remains untouched. Instead of waiting for a Court order, what's stopping GCC to remove the encroachment as per the notice issued and file a status report in the Court ahead of the Hearing.

**Sec 220 of the Chennai City Municipal Corporation Act 1919 clearly says there should not be any encroachment on the public street and Sec 222 says. If any encroachment is found, it must be removed** but Corporation officials are expecting a Court Order to do their duty that too even if the encroachment is fully on the Corporation land.

Due to the negligence of GCC officials to act on my complaint, I was constrained to file a WP in Hon'ble Madras High Court in Oct 2021. Again, the High Court issued notice to GCC for filing their response but same as how my complaint and previous court notice was ignored, this Court notice to GCC was also ignored by the officials and counter affidavit was not filed in the Court. When the matter was taken for hearing in Feb 2022, just few days ahead of court hearing, the same notice which was issued earlier was again sent to the encroachers communicating that encroachment will be removed by GCC. If it is not removed by the encroachers within 15 days from the date of notice. As reply was not filed for both the cases, (which was filed in 2018 and my case). Court gave only 2 weeks time to GCC for filing their response, GCC filed a common response in March 2021 for both WP's stating that the temple built was on the land belonging to Chennai Corporation.

As I stated earlier, Court order is not required to remove the encroachment Corporation officials can act as per CCMC Act 1919 and remove the encroachment. In addition to the above, I have already requested the GCC officials to execute the court order but no response from them.

To remove a single encroachment, I tussling with officials with the Court Orders and multiple complaints, but still no action from GCC. Hence, I have now come to this Hon'ble Ombudsman office to establish my fundamental rights with a hope that my complaints will be attended by the GCC's officials" என தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 8ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் 17.10.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது. அவர் தனது 26.10.2022 நாளிட்ட அறிக்கையில் :**

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம் - 8, பகுதி – 22, கோட்டம் - 106 சூளைமேடு, வள்ளளார் தெருவில் அமைந்துள்ள 6 அடி அகலமும் 4 அடி நீளமும் கொண்ட

சாலையை ஆக்கிரமித்து கட்டப்பட்ட முத்துமாரியம்மன் கோயிலை அகற்றி தருமாறு திரு. சேதுராமன் அவர்கள் மனு அளித்தார். அதன் பெயரில், மண்டலம் - 8, மாவட்ட வருவாய் அலுவலர் மூலமாக எழும்பூர் வட்டாட்சியர் அவர்களுக்கு 02.11.2021 அன்று கள ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க கடிதம் அனுப்பப்பட்டது. எழும்பூர் வட்டாட்சியர் அவர்கள் கள ஆய்வு செய்யப்பட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள கோயில் சாலையை ஆக்கிரமித்து கட்டியுள்ளதாக மாவட்ட வருவாய் அலுவலர் மண்டலம் - 8 அவர்களுக்கு 15.12.2021 அன்று அறிக்கை சமர்ப்பித்தார்.

அதன் படி கோயில் நிர்வாகி திரு.ரவி என்பவருக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் 28.02.2022 அன்று வழக்கு எண்.WP.No.6652/2022 தாக்கீது வழங்கப்பட்டது. அவர் தாக்கீதின் மீது உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார் வழக்கின் விசாரணையின் போது நீதி அரசர் அவர்கள் கோவிலை அகற்றி தங்களுக்கு சொந்தமான இடத்தில் கட்டிக்கொள்ளும்படி 26.4.2022 அன்று ஆணையிடப்பட்டது. இந்நிலையில் திரு. சேதுராமன் அவர்கள் உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கில் வழக்கு எண்.WP.No.21943/2021 பெருநகர சென்னை மாநகராட்சி சாலையில் ஆக்கிரமித்து கட்டப்பட்ட கோயிலை அகற்றும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன் படி 12.10.2022 அன்று கோயிலை அகற்ற துணை ஆணையர் சட்டம் மற்றும் ஒழுங்கு அவர்களுக்கு கடிதம் அளித்து காவலர் பாதுகாப்பு பெறப்பட்டது. இந்நிலையில் கோயில் நிர்வாகி மற்றும் பொது மக்கள் அனைவரும் கோயிலை, இம்மாத இறுதிக்குள் தாங்களே முன்வந்து அகற்றி தருவதாக உத்தரவாதம் அளித்தனர்.

இம்மாத இறுதிக்குள் கோயில் அகற்றப்படவில்லையெனில் 05.11.2022 அன்று காவலர் பாதுகாப்பு பெற்று பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் இக்கோயிலை அகற்றப்படும் என தெரிவித்துள்ளார்.

**2. இம்மனுக்கள் தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 26.10.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 20.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 26.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“மேற்கண்ட சென்னை சூளைமேடு வள்ளலார் தெருவில் சாலையை ஆக்கிரமித்து முத்துமாரியம்மன் கோயிலை ஆக்கிரமிப்பாளர்கள் கட்டியுள்ளனர். அதனை அகற்றிடுமாறு மாநகராட்சிக்கு பலமுறை மனுக்கள் அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு (WP No.20229 of 2018 and 21943/2021) (26.4.2022) WP 6652 of 2021 T.Sethuraman தொடரப்பட்டு, அவ்வழக்கின் மீதான 04.08.2022 நாளிட்ட தீர்ப்பில் கோவிலை அகற்ற ஆணையிட்டுள்ளது. அதனையும் மாநகராட்சி அலுவலர்கள் பொருட்படுத்தவில்லை. மேற்கண்ட கோவிலுக்கு அருகே சமூக விரோதிகள் கூடி ரகளையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், அங்கு பொதுமக்கள் நடமாட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட இடத்தில் சாலையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள முத்துமாரியம்மன் கோவிலை அகற்றிட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பித்துள்ள எனது 24.9.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் உதவி செயற்பொறியாளர் 26.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்,**

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை சூளைமேடு வள்ளலார் தெருவில் சாலையை ஆக்கிரமித்து செய்து கட்டப்பட்டுள்ள முத்துமாரியம்மன் கோயில் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் பிறப்பித்துள்ள WP No.20229/2018 and 21943 of 2021-ன் மீதான 4.8.2022 நாளிட்ட ஆணையின்படியும், கடந்த 12.10.2022 அன்று மேற்கண்ட கோயிலை அகற்ற காவல்துறை துணை ஆணையருக்கு கடிதம் அளித்து காவலர் பாதுகாப்பு பெறப்பட்டது. இந்நிலையில் கோயில் நிர்வாகி மற்றும் பொது மக்கள் கோயிலை இம்மாத இறுதிக்குள் தாங்களே முன்வந்து அகற்றிவிடுவோம் என தெரிவித்துள்ளனர். அவ்வாறு மேற்கண்ட கோவிலை அவர்களே அகற்றாவிட்டால், வரும் 5.11.2022 அன்று போலீஸ் பாதுகாப்பு பெற்று பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் மேற்கண்ட கோவில் அகற்றப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்"எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மண்டலம்-8ன் உதவி செயற்பொறியாளராக பணியாற்றும் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

மனுதாரர் திரு.T. சேதுராமன் சென்னை, சூளைமேடு, வள்ளலார் தெருவில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட முத்து மாரியம்மன் கோவிலை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரர் இம்முறை மன்றத்தை கோரியுள்ளார்.

மனுதாரருக்கு முன்பே, திரு. போத்தல் ராஜ் என்பவர் 2018-ல் மேற்கண்ட கோவிலை அகற்றகோரி, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலருக்கு மனு அளித்தும், எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காததால், சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட்மனு (WP 20229/2018) ஒன்றை 2018ல் தாக்கல் செய்ததும், அதற்கான எதிர்வாக்குமூலத்தை பெருநகர சென்னை மாநகராட்சி தாக்கல் செய்யாமல் 3 ½ வருடம் காலம் தாமதம் செய்ததையும் அறிய முடிகிறது. மனுதாரர் 2021ல் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மேற்கண்ட கோயிலை அகற்ற புகார் மனு கொடுத்தும் நடவடிக்கை எடுக்காததால் மனுதாரர் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுவை (21943 of 2021) தாக்கல் செய்துள்ளார் என்பதும் மேற்கண்ட இரண்டு ரிட் மனுக்களின் மீது, சென்னை உயர்நீதி மன்றம் 4.8.2022ல் பொதுவான தீர்ப்புரை வழங்கி, அதில், கோவிலை அகற்ற வேண்டிய நடவடிக்கையை முடிக்குமாறு ஆணையிட்டுள்ளது. மேலும் மண்டலம் -8, மாவட்ட வருவாய் அலுவலர் மூலமாக எழும்பூர் வட்டாட்சியர் அவர்களுக்கு 2.11.2021 அன்று கள ஆய்வு மேற்கொண்டு அறிக்கை கோரி கடிதம் அனுப்பப்பட்டு அதன்பேரில், எழும்பூர் வட்டாட்சியர் அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டு மேற்குறிப்பிட்ட கோவில் சாலையை ஆக்கிரமித்து கட்டியுள்ளதாக 15.12.2021 அன்று அறிக்கை சமர்ப்பித்தாக அறியமுடிகிறது. ஆனால், பெருநகர சென்னை மாநகராட்சியால் (மண்டலம் 8) கோவில் நிர்வாகிகளுக்கு இரண்டு மாதங்கள் கடந்து அதாவது 28.2.2022 அன்று தான் u/s 220 read with section 222 of Chennai City Municipal Corporation Act 1919 இன்படி நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது என தெரியவருகிறது. இந்த கால தாமதத்தை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. மேலும், மேற்கண்ட கோவிலை அகற்ற 12.10.2022 அன்று துணை ஆணையர் சட்டம் (ம) ஒழுங்கு அவர்களுக்கு கடிதம் அளித்து காவலர் பாதுகாப்பு பெறப்பட்டது எனவும்,

இதற்கிடையில் கோவில் நிர்வாகம் பொது மக்கள் அனைவரும் கோவிலை இம்மாத இறுதிக்குள் தாங்களே முன்வந்து அகற்றி தருவதாக உத்தரவாதம் அளித்து உள்ளதும் தெரியவருகிறது. அவ்வாறு அகற்றப்படவில்லையெனில் **5.11.2022** அன்று காவல் துறையின் பாதுகாப்பு பெற்று பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் இக்கோவிலை அகற்றப்படும் என மண்டலம் 8ன் உதவி செயற்பொறியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே, "எழும்பூர் வட்டாட்சியர் கோவில் சாலையை ஆக்கிரமித்து கட்டியுள்ளதாக 15.12.2021 அன்று அறிக்கை சமர்ப்பித்தும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 8ன் அலுவலர்கள், மிகவும் உணர்ச்சி பூர்வமான இம்மாதிரி நேர்வுகளில் கோவில் நிர்வாகிகளுக்கு இரண்டு மாதம் கழித்து அதாவது 28.2.2022 அன்று நோட்டீஸ் அனுப்பியது மண்டல அதிகாரிகளின் மெத்தனப் போக்கை காட்டுகிறது. இதில் சம்பந்தப்பட்ட மண்டல அதிகாரிகளின் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும், சென்னை உயர்நீதி மன்றம் 4.8.2022 அன்று அளித்த தீர்ப்பின்படியும் மற்றும் மண்டலம்-8ன் உதவி செயற் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் கூறிய வண்ணம் கோவிலை அகற்ற பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -8ன் உதவி ஆணையர் அவர்களை இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது.

2022–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 2–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. T. சேதுராமன்,
   எண்.10, வள்ளலார் தெரு, பத்மநாபா நகர்,
   சூளைமேடு, சென்னை – 600 094.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. துணை ஆணையர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

   *He is requested to ensure the implementation of this order* (2, 3)
4. மண்டல அலுவலர்,
   மண்டலம்–8, பெருநகர சென்னை மாநகராட்சி,
   புதிய எண்.36B, புல்லா அவென்யூ,
   ஷெனாய் நகர், சென்னை – 600 030.
5. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

04/11/22